தினமணி 28/11/2019

# நிகர்நிலைப் பல்கலை.களுக்கு கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கக் குழு

## நிபந்தனைகளை மீறினால் ரூ. 10 லட்சம் வரை அபராதம்

நமது நிருபர்

சென்னை, நவ. 27: நாடு முழுவதும் உள்ள நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் மாணவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய கல்விக் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கான வரைவு வழிகாட்டுதலை யுஜிசி (பல்கலைக்கழக மானியக் குழு) வெளியிட்டுள்ளது.

நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் கல்விக் கட்டணத்தை ஒழுங்குபடுத்த இதுவரை முறையான நடைமுறைகள் இல்லாத நிலையில், உச்சநீதிமன்றம் அண்மையில் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், இந்த வரைவு வழிகாட்டுதலை யுஜிசி வெளியிட்டுள்ளது.

அதன்படி, நாடு முழுவதும் உள்ள நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களில் மாணவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய கல்விக் கட்டணத்தை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்ணயிக்க ஒன்றுக்கும் மேற்பட்ட கல்விக் கட்டண குழுக்களை யுஜிசி அமைக்க உள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் அல்லது அதற்கு இணையான பதவியில் இருப்பவர் தலைமையில் அமைக்கப்படும் இந்தக் கட்டண நிர்ணயக் குழுவில் பேராசிரியர் அளவிலான தலைசிறந்த கல்வியாளர் ஒருவர், கணக்குப் பதிவுத் துறையில் 10 ஆண்டுகளுக்கும் மேல் அனுபவம் உள்ள நிபுணர், அரசு இணைச் செயலர் அளவிலான அதிகாரி உள்பட நான்கு பேர் இடம்பெற்றிருப்பர்.

இந்தக் குழுவிடம் மாணவர் சேர்க்கைக்கு 6 மாதங்களுக்கு முன்பாக தங்களுடைய பரிந்துரைகளை நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் சமர்ப்பித்துவிட வேண்டும்.

ஊழியர்களுக்கான ஊதியம், நிர்வாகச் செலவுகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் கல்விக் கட்டணத்தை இந்தக் குழு நிர்ணயிக்கும்.

அவ்வாறு நிர்ணயிக்கப்படும் கட்டணம், மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

இந்தக் குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணத்தை மட்டுமே நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் வசூலிக்க வேண்டும்.

நன்கொடை உள்ளிட்ட கூடுதல் கட்டணங்களை வசூலிக்கக் கூடாது.

மேலும், ஒவ்வொரு நிகர்நிலைப் பல்கலைக்கழகமும் பராமரிப்புச் செலவு கணக்கு, வளர்ச்சிக்கான செலவு கணக்கு என இரண்டு கணக்குப் பதிவை தனித்தனியாக பராமரிக்க வேண்டும்.

மேலும், மாணவர்களிடம் வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம், தனி வங்கிக் கணக்கில் வரவு வைத்துப் பராமரிக்க வேண்டும். அந்த வங்கிக் கணக்கை வைத்து கடன் வாங்குவது போன்ற எந்தவித நடவடிக்கைகளையும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ளக்கூடாது.

**ரூ. 10 லட்சம் அபராதம்:** இந்த நிபந்தனைகளை மீறும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலித்த நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களுக்கு அதிகபட்சம் ரூ. 10 லட்சம் வீதம் அபராதம் விதிக்கப்படும்.

அதுமட்டுமின்றி யுஜிசி சட்டம் 1956 பிரிவு 24-இன் கீழ் நடவடிக்கையும் எடுக்கப்படும் என வரைவு வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு வழிகாட்டுதல் மீது கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடமிருந்து கருத்துகளை யுஜிசி வரவேற்றுள்ளது.

Scanned by CamScanner